மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

மதுரையில் இந்தி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் கைதாகியிருப்பது.

திரு. அ. ரகுமான்கான்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இன்றைக்கு விடியற்காலம் ஐந்து மணி அளவில் அடியார் அவர்களும், அவரைச் சேர்ந்த பலரும் மதுரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்பொழுது முதலமைச்சரவர்கள் சபையில் இல்லை. அவர் வந்த பிறகு எழுப்பலாம் என்று சொன்னால் அப்பொழுது எழுப்பத் தயார். அல்லது இதுகுறித்து தகவல் ஏதேனும் இருந்தால் அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போன்று தினசரி நடக்கும் காரியங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, அடியார் கைது செய்யப்பட்டார் என்றால் அது சாதாரணமாக அல்ல. ஒரு இரயில்வே நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழிக்கப் போகும்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அரசியல் கட்சி நடத்தும் போராட்டம். அதுகுறித்து அரசாங்கத்திற்குச் செய்தி வந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றை வரைமுறையோடு கொண்டு வரவேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் கொண்டு வந்தால் எப்படி பதில் சொல்ல முடியும்? கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ வாய்ப்பா இல்லை? அப்படிக் கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1971–72 ஆம் ஆண்டு அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த இரண்டாம் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தோறாவது அறிக்கையையும்,